
# அத்தியாயம் 7

## உலகின் மானிட இடைத்தொடர்புகளின் விளைவுகளான வர்த்தகம், போக்குவரத்து, தொடர்பாடல்


உலகின் எல்லா நாடுகளும் ஏதோ ஒருவிதத்தில் இன்னொரு நாட்டில் தங்கியிருக்கின்றன.உணவுப் பொருட்களுக்கோ கைத்தொழில் உற்பத்தி பொருட்களுக்கோ இன்னொரு நாட்டின் உதவி தேவையாக உள்ளது.இதனால் இன்று உலகளாவிய பொருளாதார விருத்திக்கு வர்த்தகம், போக்குவரத்து, தொடர்பாடல் என்பன முக்கியம் பெறுகின்றன.இதனால் உலகம் ஒரு கிராமம் என்ற எண்ணக்கரு விருத்தியடைந்து வருகின்றது. இன்று ஒருநாட்டின் பொருளாதார விருத்தியை அளவிடும் அளவுகோல்களாக வர்த்தகவிருத்தி, போக்குவரத்துவிருத்தி, தொடர்பாடல்விருத்தி என்பன காணப்படுகின்றன.

இன்று உலகின் சனத்தொகை 6000 மில்லியனையும் தாண்டியுள்ளது.கிராமம், நகரம்,நாடு,பிரதேசம்,கண்டம் என அல்லது வெள்ளை, கறுப்பு என நிற அடிப்படையில் பிரிக்கப்பட்டிருந்தாலும், ஏதோ ஒருவகையில் உலகம் ஒன்றாகப் பிணைக்கப்பட்டுள்ளதாகவே உள்ளது. இதனால் மனித உலகத்தை வணிக உலகம் எனவும் அழைக்கலாம். தகவல் தொடர்பு மூலமாக ஒருவரோடொருவரான மனிதத்தொடர்புகள் நிறுவப்பட்டு மனக்குறியீடுகள் வளர்ச்சியடைகின்றன. தொடர்பின்றி சமூகத்தில் எவரும் வாழமுடியாது. இந்த வகையில் வர்த்தகம், தொடர்பாடல், போக்குவரத்து என்பன மானிட இடைத்தொடர்புகளின் விளைவுகளால் ஏற்பட்டவை ஆகும்.

உரு 7.1



இருவர் அல்லது அமைப்புகளுக்கிடையே நடைபெறுகின்ற செய்திப்பரிமாற்றமும் அதனால் ஏற்படும் தெளிவும் தகவல் தொடர்பு எனப்படும்.பயணிகளையும் சுமைகளையும் ஓர் இடத்திலிருந்து இன்னோர் இடத்திற்குக் கொண்டு செல்வதற்குப் பயன்படுத்தப்படும் சேவை போக்குவரத்து எனப்படும். மக்களுக்கிடையே தொடர்பை ஏற்படுத்திக் கொடுத்து அதனைப் பேணிப் பாதுகாக்க நவீன கண்டு பிடிப்புக்களை மேற்கொள்வதற்கு உற்பத்தியாளனுக்கும், நுகர்வோனுக்கும், போக்குவரத்து முக்கியமானது. வியாபாரத்துடன் துணைச்சேவைகள் சேர்வதே வர்த்தகம் ஆகும்.




கணினி அறைக்கு மாணவர்களை அழைத்துச் சென்ற ஆசிரியர் குறுந்திரைப்படம் ஒன்றினை காட்டுகின்றார்.அதில் சந்தைக் காட்சியொன்று தென்பட்டது.அதில் கண்ட விடயங்கள் பற்றி மாணவர்கள் தம்முள் கலந்துரையாடிய பின்னர் தாங்கள் கண்ட காட்சி பற்றிய அறிக்கை ஒன்றினைத் தயாரித்தனர். அறிக்கை கீழே தரப்பட்டுள்ளது.

**சந்தையில் கண்ட காட்சிகள்**

- பொருட்களை வாங்குவோர்.
- பொருட்களை விற்போர்.
- விவசாயிகள் தமது உற்பத்தி பொருட்களை விற்பனை செய்தல்.
- பொருட்களை ஏற்றி இறக்கும் வாகனங்கள்.
- விற்பனை செய்வோர் தமது பொருட்களை விற்பதற்கு நுகர்வோரை அழைத்தல்.
- மக்கள் தெரிவு செய்து பொருட்களை வாங்குதல்.
- சில பொருட்கள் அளக்கப்படுதல்.
- சில பொருட்கள் நிறுக்கப்படுதல்.
- சந்தை உரிமையாளர் குத்தகை பெறுதல்.

**செயற்பாடு:**

சந்தையில் சட்டங்கள், நியமங்கள், விளம்பரங்கள், போக்குவரத்து, பணத்திற்கு பொருட்களை பரிமாற்றம் செய்தல், தேவைகளைப் பூர்த்தி செய்தல் என்பன காணப்படும் கோலத்தினை ஆசிரியருடன் கலந்துரையாடி அவை பற்றிய தகவல் ஏடு ஒன்றினைத் தயாரிக்குக.

இதிலிருந்து நாம் மனித நடவடிக்கைகளின் இடைத்தொடர்புகளிற்கு அடிப்படையாக

1. வர்த்தகம்
2. போக்குவரத்து
3. தொடர்பாடல் என்பனவற்றைக் கூறலாம்.

## 7.1 உலக வர்த்தகத்தில் செல்வாக்குச் செலுத்தும் காரணிகள்


- மத்திய காலத்தில் ஏற்பட்ட நாடுகாண் பயணங்களின் விருத்தி
- கைத்தொழில் புரட்சி காரணமாக பொருட்களின் உற்பத்தித் தொகை பன்மடங்காக அதிகரித்தமை.
- தேவைகள் அதிகரித்தமையால் உற்பத்தி அதிகரித்தமை.
- தொழினுட்ப அறிவும் பணப்பரிமாற்றமும் விரிவடைந்தமையால் ஏற்பட்ட முன்னேற்றம்.
- நவீன தொடர்பாடற் சாதனங்களின் பன்முக விருத்தி.
- உலகின் எல்லாப் பகுதிகளிலும் எல்லாப் பொருட்களையும் உற்பத்தி செய்ய முடியாமை.
- பணப்பயன்பாட்டின் முன்னேற்றத்தோடு காசோலைகள்,இலத்திரனியல் சுற்றோட்டம் துரிதமடைந்தமை.
- சிறப்புத் தேர்ச்சியுடைய நாடுகள் காணப்படல்.
- வர்த்தகம், போக்குவரத்து, செய்திப் பரிமாற்றத்தில் ஏற்பட்ட முன்னேற்றம்.
- முடிவுப் பொருட்களைச் சந்தைப்படுத்தவும் மூலப்பொருட்களை பெற்றுக் கொள்ளவும் குடியேற்ற நாடுகளை அமைத்தமை.
- வளங்களின் சமனற்ற நிலை.
- உலகின் எந்தவொரு பிரதேசமும் தமக்குத் தேவையான அனைத்துப் பொருட்களையும் பெறமுடியாதுள்ளமை.

## 7.2 புராதன காலத்தில் வர்த்தகம் விருத்தியடையாமைக்கான காரணங்கள்

- ஆதி மனிதனின் தேவைகள் வரையறைக்குட்பட்டவையாக இருந்தமை.
- தேவைகள் எளிமையாகக் காணப்பட்டமை.
- தொழினுட்ப அறிவு விருத்தியடையாமை.
- மக்கள் தமக்குத் தேவையான வளங்களைத் தமது பிரதேசத்தில் அல்லது அருகில் உள்ள பிரதேசத்தில் பெற்றுக்கொள்ளக் கூடியதாக இருந்தமை.
- கூட்டுறவாக தமது தேவைகளைத் தமது பிரதேசத்திலேயே பெறக் கூடியதாக இருந்தமை.
- போக்குவரத்து வசதிகள் குறைவாக இருந்தமை.
- விளம்பரங்கள், தொடர்பாடல் விருத்தி காணப்படாமை.
- சனத்தொகை குறைவாக இருந்தமை.
- பணத்தை பயன்படுத்தாது பண்டமாற்று முறையில் பொருட்கள் பரிமாறப்பட்டமை.


**செயற்பாடு:**
புராதன காலத்தில் வர்த்தகம் விருத்தியடையாமைக்கான காரணங்கள் யாவை?

தேசப்படம் 7.1 15ஆம் நூற்றாண்டின் முன் காணப்பட்ட வர்த்தகப்பாதை




மூலம்: கல்வி வெளியீட்டுத் திணைக்களம்

உரு 7.2 உலக நாடுகளுக்கிடையேயான ஏற்றுமதி,
இறக்குமதி வர்த்தகக் கோலம் - 2005





மூலம்: உலக வர்த்தக தாபனம் / உலக வர்த்தக அறிக்கை - 2006

## 7.3 உலக வர்த்தகம் நாடுகளுக்கு இடையே பரவியிருக்கும் தன்மை

- உலக வர்த்தகத்தில் 75 - 80% மானவை அபிவிருத்தி அடைந்த நாடுகளிற்கு உரித்தாக இருத்தல்.
- அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளின் சதவீதம் குறைவாகக் காணப்படல்.
- ஐக்கிய அமெரிக்க நாடுகள், ஜேர்மனி, பிரான்ஸ், கனடா,யப்பான் போன்ற நாடுகளில் வர்த்தகம் தங்கியுள்ளமை.
- முன்னைய சோவியத் சமவுடைமை குடியரசிற்கு உரித்தாக உள்ள நாடுகளின் பங்களிப்பு மிகக் குறைவாக உள்ளமை.
- மிகக் குறைவான சதவீதத்தை ஆபிரிக்கா நாடுகள் கொண்டுள்ளன.
- உலக வர்த்தகத்தில் பெருமளவு சதவீதம் ஐரோப்பிய நாடுகளுக்கே உரித்தாக உள்ளன.

தேசப்படம் 7.2 வர்த்தகத்தில் தங்கியிருக்கும் நாடுகள்




மூலம்: M.D குணசேன பிலிப்ஸ் உலக தேசப்படம்

7.2 படத்தினை அவதானிக்கும் போது பெரும்பாலான நாடுகள் வர்த்தகத்தின் மீது தங்கியிருப்பதைக் காணலாம். ஒவ்வொரு நாடும் தனக்குரிய வளத்தின் சிறப்புத் தன்மை, வளத்தின் பெறுமதி, சனத்தொகை, தொழில் சார் அறிவு, உற்பத்திக்குத் தேவையான மூலதனத்தைபெற்றுக் கொள்ளும் ஆற்றல் போன்ற காரணங்களுக் கேற்ப வர்த்தகத் தொடர்புகளைக் கொண்டிருப்பதனைக் காணலாம்.

**செயற்பாடு:**

(1) அபிவிருத்தி அடைந்த நாடுகள் இரண்டினைத் தெரிவு செய்து அந்நாடுகள் ஏற்றுமதி செய்யும் பொருட்களையும் இறக்குமதி செய்யும் பொருட்களையும் பட்டியற்படுத்துக.

(2) அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகள் இரண்டினைத் தெரிவு செய்து அந்நாடுகளின் ஏற்றுமதி, இறக்குமதி பொருட்களைப் பட்டியற்படுத்துக.

## 7.4 சர்வதேச வர்த்தக மீதி

ஒரு நாட்டின் ஏற்றுமதி மூலம் கிடைக்கும் வருமானத்திற்கும் இறக்குமதி மூலம் ஏற்படும் செலவுகளுக்கும் இடையிலுள்ள வித்தியாசம் வர்த்தக மீதி எனப்படும். இது சாதகமானதாக அல்லது பாதகமானதாக அமையலாம்.

அபிவிருத்தி அடைந்த நாடுகள் வர்த்தக மீதியைச் சாதகமாக வைத்திருப்பதற்கு வழங்கல்களை வரையறுத்து பொருளுக்குத் தட்டுப்பாட்டினை ஏற்படுத்துதல்,

விலைகளைத் தீர்மானிப்பதில் செல்வாக்குச் செலுத்துதல் போன்ற உத்திகளைப் பின்பற்றுகின்றன.


அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகள் முதனிலைப் பொருள்களை (விவசாயம் அல்லது கைத்தொழிலுக்கான மூலப்பொருள்) சந்தைப்படுத்துகின்றன. அவற்றிற்குப் பிரதியீட்டுப்பொருட்கள் இருப்பதனால் விலையைத் தீர்மானிக்க முடியாதுள்ளது. அத்துடன் பிரதியீட்டுப் பொருட்களின் அளவும் பெருந்தொகையாகும். எனவே இவற்றை வழங்குவோருக்கு விலையைத் தீர்மானிக்கும் சக்தி இருப்பதில்லை. எனவே இலாபம் பெறுவதில்லை.

கனிய எண்ணெய் விலை உயர்வடைவதினால் இவற்றை இறக்குமதி செய்யும் அபிவிருத்தி அடைந்த நாடுகளும் அண்மைக் காலங்களில் பாதகமான வர்த்தக மீதியைக் கொண்டுள்ளன.

அபிவிருத்தி அடைந்து வரும் சில நாடுகள் அபிவிருத்தி அடைந்த நாடுகளை முன்மதிரியாக கொண்டுபொருட்களை உற்பத்தி செய்தலும் அதனை அறிமுகப்படுத்தலும்.

மேலே கூறப்பட்ட விடயங்களை மேலும் விரிவாக கற்பதற்கு கீழே தரப்பட்டுள்ள வர்த்தக மீதி படம் 7.3 உதவியாக அமைகின்றது.

தேசப்படம் 7.3 உலக வர்த்தக மீதி




மூலம்: M. D. குணசேன - 2003

## 7.5 உலக வர்த்தகத்தின் புதிய போக்கு

- அபிவிருத்தி அடைந்த நாடுகள் பெருமளவில் கைத்தொழில் உற்பத்தி முடிவுப்பொருட்களை ஏற்றுமதி செய்கின்றன.

- அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகளின் ஏற்றுமதிப் பொருட்கள் மூலப்பொருட்கள் அதாவது முதனிலைப் பொருட்களாகக் காணப்படுகின்றன.

- புதிய கைத்தொழில் நாடுகள் எளிய நுகர்வுப் பொருட்களை வர்த்தகத்தில் ஈடுபடுத்துகின்றன.

- பல்தேசிய கம்பனிகள் உலக வர்த்தகத்தில் பெருமளவு தாக்கத்தை ஏற்படுத்துகின்றன.

- இலத்திரனியல் ஊடாகப் பணப்பரிமாற்றம் இடம் பெறுகின்றது.

- களஞ்சியப்படுத்தலின்றி தொழிற்சாலைகளிலிருந்து நுகர்வாளர் பொருள்களை பெறுகின்றனர்.

- தொடர்பாடற் சாதனங்கள் சந்தையுடன் நேரடியாக தொடர்புபட்டிருக்கின்றன.

- சிறப்பு ஏற்றுமதி பொருட்களில், சில நாடுகளின் பொருளாதாரம் தங்கியுள்ளது.

- அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகள் சிலவற்றின் கைத்தொழில்கள் மூடப்படுவதால் அதற்குரிய சந்தையை இழக்கின்றன.

- வர்த்தக உடன்படிக்கைகள்,வர்த்தக ஒழுங்கமைப்புக்கள் வர்த்தக கூட்டுக்களை ஏற்படுத்துவதில் உலக நாடுகள் முயற்சி செய்கின்றன.

- நுகர்வோரின் அவசிய தேவைகளைவிட இலாப நோக்கம் முக்கியம் பெறுகின்றது.

- அபிவிருத்தி அடைந்த நாடுகள் மூலப்பொருள்களைப் பெறுவதற்கும் தமது கைத்தொழில் முடிவுப் பொருள்களை விற்பதற்கும். அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளுடன் தொடர்பு கொண்டிருக்கின்றன.

## 7.6 சர்வதேச வர்த்தகத்தின் பிரச்சினைகளும் தீர்வுகளும்

அபிவிருத்தியடைந்துவரும் நாடுகள் மட்டுமன்றி அபிவிருத்தியடைந்த நாடுகளும் சர்வதேச வர்த்தகத்தில் பிரச்சினைகளை எதிர்நோக்குகின்றன. அந்நாடுகள் எதிர்நோக்கும் பிரச்சினைகளும் தீர்வுகளும் அட்டவணை 7.1 இல் காட்டப்படுகின்றன.

அட்டவணை 7.1

| அபிவிருத்தி அடைந்த நாடுகள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் | தீர்வு நடவடிக்கைகள் |
|---|---|
| • கனிய எண்ணெய் விலை துரிதமாக அதிகரிப்பதால் கைத்தொழில் உற்பத்திகளின் விலை அதிகரித்தல்.<br>• அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகள் தமது நாடுகளில் கைத்தொழில்களை ஆரம்பிப்ப தனால் அபிவிருத்தி அடைந்த நாடுகளுக்கு மூலப்பொருள்களைப் பெற முடியாதிருத்தல். | • வர்த்தகக் கூட்டுகளை ஏற்படுத்தல், புதிய சந்தைகளைக் கண்டறிதல்.<br>• இருபக்க வர்த்தக ஒப்பந்தங்களை ஏற்படுத்தல்.<br>• பிரதியீட்டுப் பொருள்களில் சார்ந்திருத்தல்.<br>• சில உற்பத்திகளை மீள் சுழற்சிக்கு உட்படுத்துவதில் கவனம் செலுத்துதல். |

| அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் | தீர்வு நடவடிக்கைகள் |
|---|---|
| • சந்தைப் பொருள்களுக்கு நியாயமான விலை பெறமுடி யாதிருத்தல்.<br>• பல்தேசிய கம்பனிகளின் செல்வாக்கு.<br>• அபிவிருத்தி அடைந்த நாடுகளின் செல்வாக்கு.<br>• பாரம்பரிய சந்தைகளை விட்டு விலகுதல். | • வர்த்தக உடன்படிக்கைகள்<br>• பகிரங்க ஏலவிற்பனை முறைகளைப் பின்பற்றுதல்.<br>• போட்டியாக தேசிய உற்பத்திகளைப் பல்வகைப்படுத்தல்.<br>• வலய ஒழுங்கமைப்புக்களை ஏற்படுத்தல்.<br>• போட்டியான புதிய சந்தைகளுக்குள் நுழைதல்.<br>• வர்த்தக கண்காட்சிகளை நடாத்துதல். |

சர்வதேச வர்த்தகத்தில் அபிவிருத்தி அடைந்த நாடுகளும் அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகளும் எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்கான தீர்வுகள் நிரந்தரமானவையன்று. அவை அக்காலத்தில் ஏற்படும் பிரச்சினைகளுக்கான தற்காலிக பரிகார நடவடிக்கைகளே ஆகும்.

## 7.7 சர்வதேச வர்த்தக கோலம்

| நாடுகளின் நிலை | | நாடுகள் | | வர்த்தக அமைப்புகளும் கூட்டுகளும் |
|---|---|---|---|---|
| அபிவிருத்தியடைந்துள்ள நாடுகள் | → | ஐக்கியஇராச்சியம், பிரான்சு, ஜேர்மனி | → | ஐரோப்பிய ஒன்றியம் |
| | | ↑ ↓ | | |
| அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகள் | → | இலங்கை, பங்களாதேஷ், மாலைதீவு | → | சார்க் அமைப்புக்கள் |
| எண்ணெய் வள நாடுகள் | → | ஈரான், ஈராக், சவுதி அரேபியா | → | ஒபெக் |

**செயற்பாடு:**

பின்வரும் விடயங்களின் கீழ் உமது தகவல் கோர்ப்பை விருத்தி செய்க.

நாடுகளிடையே வர்த்தகத்தை உறுதிப்படுத்துவதற்கு அமைக்கப்பட்டுள்ள
- சர்வதேச அமைப்புகள்
- வலய அமைப்புக்கள்.
- நாடுகளுக்கிடையிலான வர்த்தக உடன்படிக்கைகள்.
- இந்த அமைப்புக்கள், உடன்படிக்கைகள் மூலம் இலங்கை பெற்றுள்ள நன்மைகள் என்பவற்றைப் பட்டியற் படுத்துக.

## 7.8 போக்குவரத்து

மனிதர்களை அல்லது பொருட்களை ஓரிடத்திலிருந்து இன்னோர் இடத்துக்கு எடுத்துச் செல்லுதல் போக்குவரத்து எனப்படும்.முக்கிய போக்குவரத்து முறைகளை பின்வரும் அட்டவணை எடுத்துக் காட்டுகிறது.

போக்குவரத்து

- தரை
  - புகையிரதம்
  - நெடுஞ்சாலை
- நீர்
  - சமுத்திரமும் கடலும்
  - உள் நாட்டு நீர்வழிப் போக்குவரத்து ஆறு, ஏரி கால்வாய்
- ஆகாயம்
  - உள்நாடு
  - சர்வதேசம்

ஆதிகாலத்தில் போக்குவரத்து ஊடகங்களாக மனித உழைப்பும் விலங்குகளின்உழைப்பும் (பயிற்சி அளிக்கப்பட்ட விலங்குகள், மாடுகள், குதிரை, பறவை) பயன்படுத்தப்பட்டன. நவீன உலகில் இதற்காகப் பல முன்னேற்றகரமான உபகரணங்கள் பயன்படுத்தப்படுகின்றன.

## 7.9 குழாய்வழிப்போக்குவரத்து

நீர், எண்ணெய் போன்றவற்றைக் கொண்டு செல்வதற்கு குழாய்வழிப் போக்குவரத்து பயன்படுகின்றது. எண்ணெய் கொண்டு செல்லும் முறையினை உரு 7.3 காட்டுகிறது.

உரு 7.3



## 7.10 விலங்குகளின் உழைப்பு

நவீன தொழினுட்ப வளர்ச்சியடைந்த போக்குவரத்து முறைகளை பயன்படுத்துவதால் தற்போது விலங்குகளை பயன்படுத்துதல் குறைவாக காணப்பட்டாலும் அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளில் இன்றும் விலங்குகளை பயன்படுத்தி வருகின்றனர். இதனை உரு 7.4 காட்டுகின்றன.

உரு 7.4



ஒட்டகம்



மாட்டு வண்டி



மாடு

## 7.11 பௌசர் மூலம் போக்குவரத்து

குறுகிய தூரத்திற்கு நீர், எண்ணெய் போன்றன கொண்டு செல்லப்படும்போது நகர்களுக்கிடையேயான தரைவழிப் போக்கு வரத்து முறையாக பௌசர் பயன்படுத்தப் படுகின்றது. தரைமார்க்கமாக பௌசர் மூலம் எண்ணெய் கொண்டு செல்லப்படும் முறையினை உரு 7.5 காட்டுகின்றது. இதனை தவிர பால், நீர், வாயு, இரசாயனப் பொருள் என்பன எடுத்துச் செல்வதற்கும் பௌசர் பயன்படுத்தப்படுகின்றது.

உரு 7.5




## 7.12 கேபிள்

மின் உற்பத்தி செய்யும் நிலையத் திலிருந்து ஏனைய இடங்களுக்கு மின்னை எடுத்துச் செல்லவும் மின்னைப் பயன் படுத்தி மலை உச்சிகளில் பொருட்களை ஏற்றி இறக்கவும் பயணிகளை ஏற்றி இறக்கவும் கேபிள் போக்குவரத்து முறை பயன்படுகின்றது. (உரு 7.6)

உரு 7.6




இலவசப் பாடநூல் விநியோகத்திற்காக.

## 7.13 புகையிரதப் போக்குவரத்து



உரு 7.7

நீண்ட தூரங்களிற்கு பொருட்களை எடுத்துச் செல்லவும், மனிதர்கள் பயணம் செய்யவும் புகையிரதப் போக்குவரத்து உதவுகின்றது. பெரிய சைபீரியன் புகையிரதப்பாதை இதற்கு உதாரணமாகும். அபிவிருத்தி அடைந்த நாடுகளில் கைத்தொழில் மூலப் பொருட்களையும் பாரமான பொருட்களையும் கொண்டு செல்வதற்குப் பெருமளவில் பயன் படுத்தப்படுகின்றது. சுற்றுலாப் பயணிகளிற்கான சொகுசு பயண போக்குவரத்து சேவையாகவும் பயன்படுத்தப்படுகின்றது. அபிவிருத்தியடைந்த நாடுகளில் வீதிநெரிசல் உள்ள லண்டன், பாரிஸ் நகரங்களில் சுரங்க புகையிரத பாதைகள் பயன்படுத்தப்பட்டு வருகின்றன.
(உரு 7.7)

## 7.14 கொள்கலன்



உரு 7.8

பொருட்களை கொண்டு செல்வதில் துரிதமானதும், பாதுகாப்பானதுமான போக்குவரத்து சேவையாக இது கடலிலும் தரையிலும் பயன்படுத்தப்படுகின்றது. கொள்கலன் போக்குவரத்திற்காக விசேட கப்பல்கள் ட்றக் வகைகள் (உதாரணமாக டிப்பர்) என்பன பயன்படுத்தப்படுகின்றன. இதனை உரு 7.8 காட்டுகிறது.

## 7.15 கடல்வழி போக்குவரத்து

உலக நாடுகளுக்கிடையே ஏற்றி இறக்கற் தொழிலை விரைவாக்க கடல் வழி போக்குவரத்துச் சாதனங்களாக பயணிகளைக் கொண்டு செல்லும் கப்பல், சரக்குக் கப்பல், கொள்கலன் கப்பல், எண்ணெய்த் தாங்கிக் கப்பல், யுத்தக் கப்பல் என்பன பயன்படுத்தப்படுகின்றன. (உரு 7.9, உரு 7.10)




உரு 7.9



உரு 7.10

## 7.16 உலகின் பிரதான கடல் வழிப்பாதை

தேசப்படம் 7.4




1. வட அத்திலாந்திக் கடல் வழி
2. பனாமா கால்வாய் கடல்வழி
3. நன்னம்பிக்கைமுனையை அடிப்படையாகக் கொண்ட கடல்வழி
4. தென்அத்திலாந்திக் கடல் வழி
5. சுயஸ் கால்வாய் கடல் வழி
6. பசுபிக் கடல் வழி

**செயற்பாடு:**

| பிரதான கடல் வழிப் பாதை | தொடர்புபடும் கண்டங்கள், நாடுகள் | கடல் வழிப் பாதையில்அமைந்துள்ள முக்கிய வர்த்தகத் துறைமுகங்கள் |
|---|---|---|
| | | |
| | | |
| | | |

## 7.17 ஆறு, நீர்வழிப் போக்குவரத்து

போக்குவரத்துக்காக ஆற்றினைப் பயன்படுத்துவதில் ஆற்றின் நீளம், அகலம், ஆழம், நீரின் கனவளவு, ஆறுகளுக்கு குறுக்காகச் செல்லும் வீதிகளுக்கான பாலங்கள், நீர் மாசடைதல், கரையோர அரிப்பு, அது பாய்ந்து செல்லும்வழி முதலான விடயங்கள் செல்வாக்குச் செலுத்துகின்றன. இதை அண்டிக் கைத்தொழில் அமைவிடங்கள் அமைக்கப்பட்டுள்ளன. ஜேர்மனியில் றைன் நதி இதற்கு உதாரணமாகும்.

### நீர்ப்போக்குவரத்துக்கு பயன்படுத்தப்படும் முக்கிய ஆறுகள்

சென்லோறன்ஸ், மிசிசிப்பி, றைன், டன்யூப், சிந்து, குவாங்கோ, யாங்சிக்கியாங் என்பனவாகும்.

### ஏரிவழிப்போக்குவரத்து

வட அமெரிக்காவில் ஐம்பெரும் எரிகள் முக்கியமான உதாரணமாகும். இவ் ஏரிக்கு அருகிலுள்ள இரும்பு, நிலக்கரி, சுண்ணக்கல் என்பவற்றை கைத்தொழிற்சாலைகளுக்கு எடுத்துவர இலாபகரமான ஊடகமாக இவை விளங்குகின்றன. டெற்றொயிற் கைத்தொழில் நகரம் இதற்கு உதாரணமாகும்.

### கால்வாய் வழிப்போக்குவரத்து

சீனா, வடஅமெரிக்கா என்பன கால்வாய் வழிப்போக்குவரத்தைச் சிறப்பாகப் பயன்படுத்துகின்றன. சீனாவில் பீஜிங் தலைநகரம் உள்ளகக்கடைத் தொகுதிகளுடன் கால்வாய்வழிப்போக்குவரத்து வலையமைப்புகளூடாக இணைக்கப்பட்டுள்ளது. வெனிஸில், கொண்டோலா படகுகள் மூலம் இடம்பெறும் போக்குவரத்தானது வர்த்தகம், சுற்றுலா போன்ற நடவடிக்கைகளுக்கு முக்கிய இடத்தைப் பெறுகிறது. கடல் மார்க்கத்தைக் குறுகியதாக்க கட்டப்பட்ட கால்வாய்கள் இன்னொரு முக்கிய பணியினைச் செய்கிறது. சுயஸ் கால்வாய்,பனாமாக் கால்வாய் என்பன இதற்கு உதாரணங்களாகும்.

### கால்வாய் வழி முக்கியத்துவம்

| தொடர்புறும் சமுத்திரம், கடல் | கால்வாயின் பெயர் | கட்டப்பட்ட ஆண்டு | கால்வாயின் நீளம் |
|---|---|---|---|
| • பசுபிக், அத்திலாந்திக் சமுத்திரம்<br>• செங்கடல்-மத்திய தரை கடல் | பனாமா கால்வாய்<br>சுயஸ் கால்வாய் | 1969<br>1914 | 80 Km<br>160 Km |

**செயற்பாடு:**

உலகின் பிரதான கப்பல் பாதையில் அமைந்துள்ள வர்த்தகத் துறைமுகங்கள், ஆற்றுவழிப் போக்குவரத்துக்குப் பயன்படுத்தப்படும் ஆறுகள், கால்வாய் வழிப்போக்குவரத்து என்பவற்றை உலகப்படத்தில் குறித்துப் பெயரிடுக.

## 7.18 ஆகாய வழிப்போக்குவரத்து

உரு 7.11




அதிக செலவுள்ள மிகத்துரிதமான போக்குவரத்து முறையாகும். நவீன உலகில் அத்தியாவசியமான போக்குவரத்து ஊடகமாக விளங்குகின்றது. தேவைகளுக் கேற்ப பெறும் பயன்களும் பல்வேறுபட்டனவாகும். நாட்டின் பொருளாதாரத்தை வலுப்படுத்தும் ஊடகமாக இதனைக் கொள்ளலாம்.

### ஆகாய வழிப்போக்குவரத்தின் முக்கியத்துவம்

- பயணிகள் போக்குவரத்து ஊடகம்.
- சர்வதேச போக்குவரத்தில் துரித போக்குவரத்துக்கான ஊடகம்.
- விரைவாக எடுத்துச் செல்ல வேண்டிய பொருள்களை கொண்டு செல்வதின் முக்கியத்துவம்.
  உ-ம்: மருந்து வகைகள், பூக்கள்.
- தரை, நீர் வழிகளால் செல்ல முடியாத இடங்களுக்குச் செல்ல முடிகின்றமை.

- போர் நடவடிக்கைகள், அஞ்சல், வான் ஒளிப்படங்கள், விண்வெளி ஆய்வு போன்றவற்றுக்கான சிறந்த ஊடகம்.

- புவியில் நிகழும் பௌதிகத் தடைகளை இலகுவில் வெற்றி கொள்ள உதவுதல்.
  உ-ம் : மலை, ஆறு.

விமான நிலையங்கள் வர்த்தக மையங்களாக மிக முக்கியத்துவம் வகிக்கின்றன. போக்குவரத்து ஊடகங்களின் சிறப்பு வசதிகள் காரணமாக பயணிகளுடன் பொருள்களும் பொதுவாக போக்குவரத்துக்குப் பயன்படுத்தப்படுகின்றன.

தரை, நீர் ஆகாயம் என போக்குவரத்து ஊடகங்களை மூன்றாகப் பிரித்து உலக நாடுகளின் பாதை வலையமைப்பை அறிந்து கொள்ளலாம். புகையிரதம், மோட்டார் வாகனம், ஆகாயம், கடல் வழிப்போக்குவரத்து என்பன ஒன்றிணைந்த சேவையாக வளர்ச்சியடைந்த நாடுகளின் நகரங்களில் காணப்படுகின்றன. பின்வரும் படத்தினை அவதானிக்கும் போது நீங்கள் இதனை அறிந்து கொள்ளலாம்.

உரு 7.12



கடல் மார்க்கம், நீர்வழிப்பாதை, பெருந் தெருக்கள், சிறு வீதிகள், புகையிரதம், ஆகாயம், கிளைப்பாதை என்பவற்றை வெவ்வேறாகப் பிரிக்க முடியாதிருப்பதை உரு 7.12 பாதை வலையமைப்பை அவதானிக்கும் போது காணலாம். அத்துடன் பல்வேறு பாதை வகைகள் ஒருங்கு சேர்ந்துள்ளமையையும் காணலாம். சீனாவில் பீஜிங் நகரத்திலும் அதன் அருகிலுள்ள உபநகரங்களிலும் இத்தகைய பாதை வலையமைப்புக் கோலத்தைக் காணமுடியும்.

**செயற்பாடு:**

பாடஆசிரியரின் உதவியுடன் இவ்வகையான ஒன்றிணைந்த பாதை வலையமைப்பைப் போக்குவரத்துக்குப் பயன்படுத்தும் நாடுகள், நகரங்கள் என்பவற்றை தேசப்படப்புத்தகங்களில் தேடியறிய முயற்சி செய்யுங்கள்.

தேசப்படம் 7.5 வட அமெரிக்காவின் சிக்காகோ, டெற்றொயிற் நகரங்களும் உப நகரங்களும்




**செயற்பாடு:**

பின்வரும் அட்டவணையை அப்பியாசப் புத்தகத்தில் பிரதி செய்து பூரணப்படுத்துக:

| போக்குவரத்து ஊடகம் | | கொண்டு செல்லப்படும் பொருட்களின் வகைகளுக் கான உதாரணங்கள் |
|---|---|---|
| மனித உழைப்பு | | ______________________ |
| **விலங்குகளின் உழைப்பு** | குதிரை | ______________________ |
| | யானை | ______________________ |
| | ஒட்டகம் | ______________________ |
| | | ______________________ |
| கேபிள் | | ______________________ |
| குழாய்வழி | | ______________________ |
| ஓடும் நீர் | | ______________________ |
| கப்பல் | | ______________________ |
| அமைக்கப்பட்ட கால்வாய்வழி | | ______________________ |
| விமானம் | | ______________________ |
| கொள்கலன் | | ______________________ |
| மோட்டார் ஊர்தி | | ______________________ |
| பௌசர் | | ______________________ |
| கப்பல் | | ______________________ |
| புகையிரதம் | | ______________________ |

**தொடர்பாடல்**

தனியாள் தனியாளுடனோ அல்லது தனியாள் ஒரு குழுவிடமோ செய்திகளை பரிமாறிக் கொள்ளுதல் ‘தொடர்பாடல்’ எனப்படும்.

**தொடர்பாடல் ஊடகங்கள்**

இன்று தொடர்பாடல் செயன்முறையில் அச்சு ஊடகங்களை விட இலத்திரனியல் ஊடகங்கள் முன்னணியில் விளங்குகின்றன. இலத்திரனியல் ஊடகங்களிலுள்ள கருவிகளும் முறைகளும் மிகத்துரித கதியில் விருத்தியடைவதால் எதிர்காலத்தில் மாற்றங்கள் ஏற்படவும் இடமுண்டு.

உரு 7.14 தொடர்பாடல் சாதனங்கள்

**வெற்றிகரமான தொடர்பாடல் இடம்பெற வேண்டுமாயின் .........**


- செய்தியை அனுப்பும் இடத்திலிருந்து செய்தியைப் பெறும் இடம் வரை
- ஏற்படக் கூடிய தடைகளை நீக்குதல்.
- செரவிடும் காலத்தை குரைத்தல்.
- செய்தி பயணிக்கும் நேரத்தை குரைத்தல்.
- செலவினை குரைத்தல்.
- ஆரம்ப செய்தியுடன் இணையும் கிளைச் செய்திகள்
- மொழி அல்லது சமிக்ஞை பிரச்சினைகள்
- இழிவளவாக இருப்பதுடன் நம்பிக்கையும் இருத்தல் வேண்டும்.



**தொடர்பாடல் ஊடகங்கள்**

- அச்சு சாதனங்கள்
  - செய்திப் பத்திரிகை
  - சஞ்சிகை
  - கடிதங்கள்
  - நூல்கள்
- இலத்திரனியல் சாதனங்கள்
  - வானொலி
  - தொலைக் காட்சி
  - மின் அஞ்சல்
  - ராடர்
  - செய்மதி
  - தொலை நகல்

| இலத்திரனியல் ஊடகங்களின் சாதகமான விளைவுகள் | இலத்திரனியல் ஊடகங்களின் பாதகமான விளைவுகள் |
| --- | --- |
| • வர்த்தகம் போக்குவரத்து என்பவற்றைத் தொடர்புபடுத்தும் ஊடகமாக செயற்படுதல்.<br>• உலக நாடுகள், பிரதேசங்கள் கிராமங்கள் என்பவற்றின் பௌதிக தூரத்தை வெற்றி கொள்ளுதல்.<br>• நேரத்தை மீதிப்படுத்த உதவுதல்.<br>• தனியாள்களுக்கிடையில் / இனங்களுக்கிடையில் தொடர்புகள் விருத்தியடைதல்.<br>• தகவல் விரைவில் வெளிவருதல்.<br>• போட்டி சந்தைக் கோலம் உருவாகுதல். | • தாபிப்பதற்கான செலவு அதிகம்.<br>• எல்லோருக்கும் பொதுவான சேவையைப் பெறமுடியாது.<br>• மொழிப்பிரச்சினைகள் காணப்படும்.<br>• பயிற்சி பெறாத போது ஏற்படும் தீமைகள்.<br>• சமூக விழுமியங்களுக்கு எதிராக செயற்படும் சந்தர்ப்பங்கள்<br>• இலத்திரனியல் ஊடகங்கள் வழியே வெளியாகும் வர்த்தக அறிவித்தல்கள் காரணமாக சந்தைகள் மாற்றமடைதல். |




**செயற்பாடு:**

தொடர்பாடல் சாதனங்களால் இடைத்தொடர்பு நடவடிக்கைகளுக்கு ஏற்படும் அனுகூலம், பிரதிகூலம் பற்றி விவாதம் நடாத்துக.